**CC.84/2022** Dt: 24.03.2025

எதிரி தரப்பில் பிரிவு 348 BNSS ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2857/ 2024 Dt–07.05.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2025.

24.03.2025

அ.சா.3–ஆசிர்வாதம்

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறிப்பு:** சாட்சி 22.09.2023 ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டமாக இருந்ததால் யார் யாருக்கு இடையே சண்டை நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். சம்பவ சமயத்தில் கூட்டத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 25 பேர் இருந்தார்கள். கூட்டத்தில் யார் யார் கையில் எத்தனை ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்று என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை கைகளால்தான் அடித்தார்கள்.

2) அ.சா.1 வினோத்திற்கு எந்தெந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னிடம் சர்ச்சில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**CC.84/2022** Dt: 24.03.2025

எதிரி தரப்பில் பிரிவு 348 BNSS ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2857/ 2024 Dt–07.05.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2025.

24.03.2025

அ.சா.1–மங்கலேஸ்வரன்

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறிப்பு:** சாட்சி 22.09.2023 ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரிகள் எந்த ஆயுதம் வைத்திருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்று சொன்னால் சரியல்ல கம்பு வைத்திருந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக யார் எப்போது எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவ நேரத்தில் சுமார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 10 பேர் இருந்தார்கள். தேர்தல் சம்பந்தமாக கூட்டம் நடந்தது என்றால் சரிதான். நாங்கள் ஒரு பிரிவினராகவும், எதிரிகள் ஒரு பிரிவினராகவும் செயல்பட்டோம் என்றால் சரியல்ல.

2) தேர்தல் நடக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ நாள், சம்பவ நேரத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டு அந்த வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்ட தோல்வியினால் எதிரிமீது அ.சா.1 கொடுத்த பொய்

புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.